செ.வெ.எண்:13 நாள்:06.06.2019

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தென்மேற்கு பருவமழையின் போது மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றுது.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தென்மேற்கு பருவமழையின் போது மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், வெள்ள தடுப்புப்பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் இன்று (06.06.2019) நடைபெற்றுது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் உள்ள திருமண மண்டபங்கள், பள்ளிக்கூடங்கள் அனைத்தும் அந்தந்த பகுதிகளிலுள்ள வருவாய் துறை அலுவலர்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். பொதுமக்களுக்கு தேவையான உணவு பொருட்கள் தடையின்றி கிடைத்திட, அந்தந்தப்பகுதிகளில் உள்ள நுகர்பொருள் கிட்டங்கிகளில் தேவயைான அளவு இருப்பு இருப்பதை நுகர்பொருள் வழங்கு துறை அலுவலர்கள் உறுதி செய்திடவேண்டும். சுகாதாரத்துறை அலுவலர்கள் தேவையான நோய் எதிர்ப்பு மற்றும் அத்தியாவசிய மருந்துகள் அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் ஆகியவற்றில் இருப்பு வைத்திருப்பதை உறுதி செய்திட வேண்டும். மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி, ஊராட்சி ஆகிய பகுதிகளில் பொதுமக்களுக்கு தடையின்றி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட உள்ளாட்சித்துறை அலுவலர்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களுடன் இணைந்து ஆவன செய்ய வேண்டும். மாவட்ட தீயணைப்புத்துறையினர் மற்றும் மீன்வளத்துறையினர் தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள பொதுமக்களை பாதுகாக்கும் படகு உள்ளிட்ட பொருட்களை தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். போக்குவரத்து துறையினர் தடையின்றி பொதுமக்களுக்கு அத்தியாவசியமான போக்குவரத்து வழங்க வேண்டும்.

கால்நடைத்துறையினர் கால்நடைகளுக்கு தேவையான நோய் எதிர்ப்பு மற்றும் நோய் தடுப்பு மருந்துகளை தேவையான அளவு இருப்பு வைத்துக்கொள்ள வேண்டும். சுகாதாரத்துறையினர் மருத்துவ மீட்புக்குழுக்களை அமைத்து அவை அனைத்தும் தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். தீயணைப்புத்துறையினர், காவலத்துறையினர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை சார்ந்தவர்கள், தேசிய மாணவ படையினர் ஆகியோருக்கு அவசியமான பயிற்சி அளித்து அவர்களையும் தொடர்பில் வைத்துக்கொள்ள வேண்டும். தென்மேற்கு பருவமழையின் போது வெள்ளம் ஏற்பட்டால் பொதுமக்களுக்கு சிறிதளவும் பாதிப்பு ஏற்படாதவகையில் அனைத்து துறையினரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு பொதுமக்களையும் அவர்களது உடமைகளையும் பாதுகாக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

கூட்டத்தில், தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரான் ஜீத் சிங் கலோன், இ.ஆ.ப, கோவில்பட்டி கோட்டாட்சியர் திருமதி.அமுதா, இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.மகாதேவன், உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) திரு.உமா சங்கர், துணை இயக்குநர் சமூக பாதுகாப்பு திட்டம் திரு.சங்கரநாராயணன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் திட்ட அலுவலர் திருமதி.முத்துலெட்சுமி மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.